எவரெஸ்டு சிகரம் ஏறிய

கோவளம் இராஜசேகருக்குப் பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே.21-

கோவளத்தைச் சேர்ந்த இராஜசேகர் பச்சை எனும் இளைஞர் எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :

பல்வேறு விளையாட்டுகளிலும் நம் இளைஞர்கள் முத்திரை பதித்து நம்மையும் தமிழ்நாட்டையும் பெருமிதம் கொள்ளச் செய்கிறார்கள். அந்தவகையில் கோவளத்தைச் சேர்ந்த இராஜசேகர் பச்சை எனும் இளைஞர் உலகின் மிக உயரிய எவரெஸ்ட் சிகரத்தைத் தன் விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஏறி அடைந்துள்ளார் என்று அறிந்து மகிழ்ந்தேன். அவருக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தியாகராயர் நகர் மேற்கு

பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

பகுதி அமைப்பாளர் எஸ்.உமாசங்கர் வேண்டுகோள்!

சென்னை, மே.20-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் எனது (பகுதி அமைப்பாளர் எஸ். உமாசங்கர்) தலைமையில் நடைபெறும் ஆலோசனை கூட்டத்தில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, ராஜா அன்பழகன் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

தியாகராயர் நகர் மேட்லி சாலையில் உள்ள மணமகிழ் மன்றத்தில் இன்று (21-05-2023) காலை 10.00 மணியளவில் நடைபெறும் கூட்டத்திற்கு பகுதி துணை அமைப்பாளர், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம், கழக உறுப்பினர்கள் சேர்த்தல், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதி அமைப்பாளர் எஸ்.உமாசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி. வீபா வாசு மறைவையொட்டி, குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார். உடன், மேயர் திருமதி. ஆர்.பிரியா, செயலாளர்சிவ் தாஸ் மீனா, ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாமன்ற ஆளும் கட்சித் தலைவர்ஆர்.இராமலிங்கம், ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்தான் அனைத்துத் திட்டங்களையும்

முன்மாதிரியான முன்னெடுப்பை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்துகிறது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, மே.20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தான் மக்களுக்காகத்தான் திட்டங்கள் என்ற வகையிலே அனைத்து திட்டங்களையும் செயல்படுத்துகின்ற ஒரு முன்மாதிரியான முன்னெடுப்பை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தகவல்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 202324ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (20.5.2023) வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை வேளச்சேரி, 100 அடி புறவழிச் சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை ரூ.2 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்துவது தொடர்பாகவும், சோழிங்நல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, பெரும்பாக்கம், சேரன் நகர், சரஸ்வதி ராஜசேகரன் சாலையில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்படுவது தொடர்பாகவும் நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 202324ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவுபடுத்த வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையில் 50 இடங்களையும் நேரடியாக சென்று கள ஆய்வு செய்ய முடிவு செய்து, சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளில் நேற்றோடு (20.5.2023) 24 இடங்களில் கள ஆய்வு செய்திருக்கின்றோம் மீதமுள்ள 8 சட்டமன்ற தொகுதிகளிலுள்ள 10 திட்டங்களையும் இந்த மாத இறுதிக்குள் நேரடியாகச் சென்று களஆய்வில் ஈடுபடவிருக்கின்றோம்.

அந்த வகையில், அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக நேற்று (20.5.2023) வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை, வேளச்சேரி, 100 அடி புறவழிச்சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை ரூ.2 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்துவது தொடர்பாக கள ஆய்வு செய்திருக்கின்றோம். அதேபோல, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, பெரும்பாக்கம், சேரன் நகர், சரஸ்வதி ராஜசேகரன் சாலையில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைப்பதற்கு முடிவெடுத்திருக்கின்றோம். இப்பணிகள் துவங்குவதற்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் செயல்படுகின்ற சிதிலமடைந்த பள்ளிக்கூடங்களை புதுப்பித்தல், பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல், சலவைக் கூடங்களை மறுவளர்ச்சி மேம்படுத்துதல், காசிமேடு கடற்கரையோரம் 5 கிலோ மீட்டர் அளவிற்கு அந்த இடத்தை அழகுபடுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒட்டுமொத்தமான சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் இந்த அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய ஆலோசனையின் பேரில் வடிவமைத்த இந்தத் திட்டங்கள் அனைத்தும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்று அதற்கு ஏற்றாற்போல், திட்டங்களைத் திருத்தி அமைத்து, மக்களுக்காகத்தான் திட்டங்கள் என்ற வகையிலே இந்த திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ஒரு முன்மாதிரியான முன்னெடுப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் இல்லாத ஒரு புதிய நடைமுறையை துறை அதிகாரிகளுடன் சேர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த களஆய்வு நிச்சயம் ஒரு பயனுள்ளதாக அமையும். இந்த பகுதிகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் அனைவருடைய உடல் நலத்தைப் பாதுகாக்கின்ற வகையிலும், அதே நேரத்தில் விளையாட்டை ஊக்குவிக்கின்ற வகையிலும், பெரும்பாக்கத்தில் விரைவில் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட அனைத்து பணிகளையும் விரைவுபடுத்துகின்ற நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, அடையார் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் துரைராஜ், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் ருத்ரமூர்த்தி, முதன்மைத் திட்ட அமைப்பாளர் திருமதி. அனுசுயா அவர்கள், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

தலைமை: மு.ஆதிமாறன் ! எஸ்.சேகர் எம்.சி. வரவேற்புரை!

சென்னை, மே 21-

தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (21.5.2023 ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில் சேகர் மஹால் எதிரில் உள்ள காமராஜர் பூங்கா திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு அவைத் தலைவர் மு.ஆதிமாறன் தலைமை வகிக்கிறார்.

பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான எஸ்.சேகர், வ.க. ரவிச்சந்திரன், கே.சாமுண்டீஸ்வரி, ஜெ.மணிவண்ணன், எஸ்.கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., எஸ்.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., டி.ஜெபதுரை, ஜெ.குப்புசாமி, எஸ்.சிவக்குமார், வி.யோபு, கே.சுந்தர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

எஸ்.ஐசக், க.குருநாதன், கே.வெங்கடேசன், ஆர்.சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன், பி.சுரேஷ், ஆர்.ரத்தினகுமார், எம்.துளசிராமன், டி.கே.கோட்டி, வி.நடராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ. அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் எஸ்.ஆர்.இராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்த குமாரி, துணை மேயர் ஜி. காமராஜ், டி.காமராஜ் எம்.சி., லயன் எஸ்.சங்கர், பொன்.சதாசிவம்,

பெ.கணேசன், க.ராஜாராஜன், பெ.நந்தகுமார், செ. பழனி, எ.குருசாமி, ப.இப்ராகிம், த.கதிரவன், ம.முனுசாமி, த.ஹரி ஹரன், நீ.உதயகுமார், பி.கார்த்திகேயன், எம்.ராமமூர்த்தி மற்றும் அனைத்து வார்டு கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக பி.புகழேந்தி எம்.சி. நன்றி கூறுகிறார்.

தலைமை : ஜிம் க.பிரபு, முன்னிலை: எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., சைதை மா.அன்பரசன் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி.,

சைதை மேற்குப் பகுதியில் 139 (அ) வட்ட இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - சென்னை அரங்கநாதன் சிறப்புரை!

சென்னை, மே.21-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்குப் பகுதி 139 (அ) வட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீறிய தலைமையில் இரண்டாண்டு நிறைவு திராவிட மாடல் அரசின் தொடர் சாதனைகளை விளக்கி மாபெரும் தெருமுனைக் கூட்டம் இன்று (21-5-2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் ஜாபர்கான் பேட்டை, வீதிமாரியம்மன் கோவில் தெருவில் ஜிம்.க.பிரபு தலைமையிலும் சைதை மேற்குப் பகுதி கழகச் செயலாளரும் 10வது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குப் பகுதி கழகச் செயலாளரும், 13வது மண்டலக் குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்குமாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தலைமைக் கழகப் பேச்சாளர் சென்னை அரங்கநாதன், ஆகியோர் திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சிஎன்றவிளக்கத்துடன் இரண்டாண்டு நிறைவு சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றயுள்ளனர்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, பங்கேற்கயுள்ளனர். பகுதி அவைத்தலைவர் களக்காடிஎல்லப்பன், பகுதிப்பொருளாளர் வி.பி.ஜானகி ராமன், 139(அ) வட்ட கழகச்செயலாளர் சை.மு.சேகர், 139வது வட்ட கழகச் செயலாளர் அட்கோ கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கோ.மதிவாணன், டி.என். சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோர் வரவேற்புரையாற்றயுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் மாவட்டக்கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம்மு. மனோகரன், வாசுகிபாண்டியன், வேளச்சேரி எஸ். பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதைசம்பத், மின்னல் கந்தப்பன், 168வது மாமன்ற உறுப்பினர் த.மோகன்குமார், பகுதிக்கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், த.பாபு, வட்டக்கழகச்செயலாளர்கள் நா.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, மாவட்டப்பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், கிண்டி செல்வம், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி. பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணி, எம்.எஸ்.அரிபாபு, வெ.புருஷோத்தமன், என். தீனதாயளன், பி.நரேஷ் குமார், பகுதி இளைஞர்அணிதுணைஅமைப்பாளர்கள் ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, பா.மோ.கார்த்திக், இரா.வெங்கடேசன், பகுதி அமைப்பாளர்கள் த. மணி, ராஜாஆறுமுகம், சார்பு சரவணன், ஆட்டோ சேகர்,

வட்டக் கழக நிர்வாகிகள் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதாயளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை, கொடி சுரேஷ், டி. கோபாலகிருஷ்ணன், எஸ். முகமதுஅலி, என்.ராஜேஷ், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அ.அயாத் பாஷா, அ.சுப்பிரமணி, து. முரளி, எல்.சந்திரன், சி.டி. காசிநாதன், வி.சபரி மற்றும் அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டச் செயர் குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர்அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தில் இறுதியாக வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜி.ரஞ்சித், ம.தீலிபன் ஆகியோர் நன்றியுரையாற்றவுள்ளனர்.

தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.! திருவொற்றியூர் 10-வது வட்டத்தில்

கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

தி.மு.தனியரசு வரவேற்புரை! ஆடுதுறை உத்திராபதி - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் -சி.தசரதன் சிறப்புரை!

சென்னை, மே 21 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10வது வட்ட இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் இன்று (21.5.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு டி.எச்.ரோடு சன்னதி தெரு சந்திப்பில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எம்.செந்தில் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

1வது மண்டல குழு தலைவர் - பகுதி செயலாளர் தி.மு.தனியரசு வரவேற்கிறார்.

இ.பாலசுப்ரமணியன், டி.என். முரளி, மனோகரன், கே.மோகன், எஸ்.சிரிஷா, சி.டி.சீரப்பன், எம். ராஜேந்திரன், கே.ரஜேந்திரன், வி.ஜி. எம். பாலாஜி, பி.கணேஷ்குமார், ஜி.சுகுமார், எம்.கலைவாணன், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.பி.பாலசந்தரம், பி.ஜி.அவினாஷ், சி.எம். அருண்குமார், எஸ்.கிஷோர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை வகிக்கிறார்.

ஆடுதுறை உத்திராபதி,டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், சி.தசரதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் வி.கவி. கணேசன், ஆர்.பத்மநாபன், வி.ராமநாதன், எஸ் கணேசன், டி.ஏ.ராஜ், இரா.முருகேசன், சாந்தி பக்தன், ஆர். சி.ஆசைதம்பி, எம்.வி. குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, இரா.குமரேசன், த.கார்த்திகேயன், எம். எல்.சரவணன், குறுத்து சி. முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டி.வி.எம். ராஜா, ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், எஸ்.பாஸ்கரன், ஓம்.ரனஜினிநந்தி, ஆர். ரஜினிபாபு, ஆர்.டில்லி, டி.டி.எம்.பாபு ,வி.பழணிவேல், அ.அப்துல்சலிம், கே.கார்த்திகேயன், ம.ஜெயராமன், ம.எத்திராஜ், பி. எஸ்.சைலஸ், ப.சந்தாகிருஷ்னன், டி.சி.வி.ராஜகுமாரி, உமா, சரவணன், சரண்யா ,கலைவாணன், சுசிலா, ராஜா, பானுமதி, சந்தர் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர். எஸ்.தமிழ்செல்வன் நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு அரசு

நல்லூர் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

ந.க.எண்.22 /2023 / அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 19.05.2023

கன்னியாகுமரி மாவட்டம், நல்லூர் முதல்நிலை பேரூராட்சியில் **மூலதன மானிய நிதி (CGF) 2002-2023ன் கீழ் ரூ.133.00 இலட்சம் மதிப்பீட்டில்** நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட ஆராய்சிவிளை முதல் காவுமூலை மண் சாலையை பேவர் பிளாக்சாலையாக அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **09.06.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் (இரண்டு உறைகள் முறை) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. தொழில்நுட்ப ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு அதனடிப்படையில் இறுதிசெய்யப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் **08.06.2023** ஆம் தேதி **வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி** வரை https://tntenders.gov.in https://tenders.tn.gov.in என்ற இணையதளம் மூலம் E-Token / Digital Signature card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

தலைவர்
நல்லூர் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

செ.ம.தொ.இ/2660/ஒப்பந்தப்புள்ளி/2023

செயல் அலுவலர்,
நல்லூர் முதல்நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (20.5.2023) சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, பெரும்பாக்கம், சேரன் நகர், சரஸ்வதி ராஜசேகரன் சாலையில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்படுவது தொடர்பாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., , சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் .அன்சூல் மிஸ்ரா , சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் ருத்ரமூர்த்தி, முதன்மைத் திட்ட அமைப்பாளர் அனுசுயா , மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள்!

மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு மக்களுக்காக நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நாடே போற்றி பாராட்டும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி மாவட்டந்தோறும் இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டங்களை நடத்திட வேண்டுமென்று கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டங்கள் கீழ்ண்ட விவரப்படி நடைபெறுகிறது.

நாள் : 21.05.2023 / நேரம் : மாலை 4 – 6 மணி

பகுதி / ஒன்றியம் / பேரூர்	வட்டம் / ஊராட்சி	பேச்சாளர்
மாதவரம் தெற்கு பகுதி	27 மற்றும் 30வது வட்டம்	நன்மாறன்
சோழவரம் தெற்கு ஒன்றியம்	பெருங்காவூர், பூதூர், ஓரக்காடு, நெற்குன்றம், சோத்துபெரும்பேடு, காரனோடை	ஓப்பில்லா மணி
வில்லிவாக்கம்	மோரை, அரக்கம்பாக்கம், பாண்டேஸ்வரம், வெள்ளச்சேரி, வெள்ளானூர்	சேலம் சுஜாதா
புழல் ஒன்றியம்	வடகரை, கிராண்ட்லைன்	கரூர் முரளி
திருவொற்றியூர் மத்திய	18 மற்றும் 20வது வட்டம்	போடி காமராஜ்
திருவொற்றியூர் கிழக்கு	7 மற்றும் 9வது வட்டம்	ஆடுதுறை உத்திராபதி
திருவொற்றியூர் மேற்கு	3அ, 4, 5 மற்றும் 6வது வட்டம்	தமிழ் கொண்டான்

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தெருமுனை கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி, ஒன்றிய கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த பகுதி, ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். இக்கூட்டங்களில் அந்தந்த பகுதி, ஒன்றிய, வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் தகவல் தந்து அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.
செயலாளர், சென்னை வடகிழக்கு தி.மு.க.